# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 57/மா/2023**
**நாள் : 20.03.2023**

திரு. இரா தீபக் விக்ராந்த்,
சென்னை- 600 107. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கோல்டன் ஜார்ஜ் நகர், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை, ஸ்ரீ மஹாலக்ஷ்மி மந்திரா அடுக்ககம், 1405–பிளாக்–1Bவிங் என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. தீபக் விக்ராந்த் என்பவரின் 01.3.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 57/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, கோல்டன் ஜார்ஜ் நகர், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை, ஸ்ரீ மஹாலக்ஷ்மி மந்திரா அடுக்ககம், 1405–பிளாக்–1Bவிங் என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. தீபக் விக்ராந்த் என்பவரின் முறையீட்டு மனுவில்,

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, வார்டு–93 பச்சையப்பர் சாலையில் சுமார் 35 வண்டல் மண் மற்றும் கழிவு பொருட்கள் சேகரிக்கும் குழிகள் (SILT CATCHING PIT) வெள்ள நீர் வடிகாலுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை பல இடங்களில் சாலையின் நடுவிலும் அமைக்கப்பட்டுள்ளன. அவை சாலையின் மேல் மட்டத்திற்கு இணையாக அல்லது சிறிது தாழ்வாக அமைக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு சாலையின் மேல்மட்டத்தில் இருந்து சுமார் 5 அங்கலம் தாழ்வாக உள்ளது. இதனால் இந்த சாலையை பயன்படுத்துவோர் குறிப்பாக இருசக்கர

வாகனத்தில் செல்வோர் மற்றும் பாதசாரிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இருசக்கர வாகனத்தில் செல்வோர் பலர் இந்த பள்ளத்தில் சிக்கி கீழே விழுந்துள்ளனர்.

இது சம்பந்தமாக (SILT CATCHING PIT) வண்டல் மண் மற்றும் கழிவு பொருட்கள் சேகரிக்கும் குழிகளின் மேல் மட்டத்தினை சாலையின் மேல் மட்டத்திற்கு இணையாக இருக்குமாறு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பல புகார்களை அளித்திருந்தேன். எனது முதல் புகார் எண்.2021-414TIC நாள்: 24/11/2021 அதில் ஒரு வாரத்திற்குள் சரி செய்வதாக வார்டு 93 உதவி பொறியாளர் உறுதியளித்திருந்தார். இரண்டாவது புகார் எண்.2022-595BDL நாள்: 28.02.2022 அதில் தாங்கள் புகார் கூறிய இடத்தை கள ஆய்வு செய்யப்பட்டது இதற்கு உண்டான மதிப்பீடு தயாரித்து வார்டு குழுவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்குறிப்பிட்ட வேலை முடித்துத்தரப்படும் என்று வார்டு 93 உதவி பொறியாளர் பதில் அளித்திருந்தார். மூன்றாவதாக அம்பத்தூர் மண்டல அலுவலர் அவர்களுக்கு பதிவு தபாலில் அனுப்பிய புகார் மனு நாள்:21.07.2022 மண்டல அலுவலரிடம் இருந்து எந்தவித பதிலும் இல்லை. நான்காவதாக எனது புகார் எண்.2023-389 MMH நாள்: 08.01.2023 இதுவரை எந்த பதிலும் இல்லை.

எனது முதல் புகார் அளித்த தேதியில் இருந்து இன்று வரை ஒரு வருடங்களுக்கு மேல் கடந்த பின்பும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

Prayer

மேற்கண்ட எனது நான்கு புகார்கள் மீதும் இது நாள்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு வார்டு 93 உதவி பொறியாளர் திரு. சேகர் அவர்கள் தனது உத்தியோக பூர்வ (Official Duty) கடமையை செய்ய தவறியதே ஆகும்.

இனியும் காலம் தாழ்த்தாமல் (SILT CATCHING PIT) வண்டல் மண் மற்றும் கழிவு பொருட்கள் சேகரிக்கும் குழிகளின் மேல் மட்டத்தினை சாலையின் மேல் மட்டத்திற்கு இணையாக இருக்குமாறு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க அம்பத்தூர் மண்டல அலுவலர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு 93 உதவி பொறியாளர் திரு. சேகர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**முறையீட்டு மனுதாரர் 15.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 7 வார்டு 93 பச்சையப்பர் சாலையில் வெள்ள நீர் வடிகாலுடன் இணைக்கப்பட்டுள்ள சுமார் 35 வண்டல் மண் மற்றும் கழிவுபொருட்கள் சேகரிக்கும் குழிகள் (Silt Catching Pit) சாலை மட்டத்தில் இல்லாமல், கீழ் இறங்கு குழிகளாகக் காணப்படுகிறது. மேற்கண்ட குழிகள் உள்ள சாலையில் பொது மக்கள் நடந்து செல்லும்போது, மேற்கண்ட குழிகளால் இடறி விழுந்து வருகின்றனர். மேற்கண்ட குழிகளினால் உயிர் சேதம் இல்லை என்றாலும், அங்குள்ள பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் மாணவ மாணவியர் மற்றும் இருசக்கர வாகனங்களில் செல்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டும், காயமடைந்தும் வருகின்றனர். இது சம்பந்தமாக மாநகராட்சியில் புகார் அளிக்கப்பட்டபோது, மேற்கண்ட குழிகள் ஒரு வார காலத்திற்குள் சரிசெய்யப்படும் என மாநகராட்சி உதவிப் பொறியாளர் உறுதியளித்துள்ளார். ஆனால், இதுவரை மேற்கண்ட குழிகளை சரிசெய்ய எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதன் புகைப்படங்களையும், காணொளியையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

எனவே, மேற்கண்ட வார்டு எண் 93ல் உள்ள தெருக்களில் உள்ள ஏற்ற இறக்கம் மற்றும் பள்ளத்துடன் உள்ள வண்டல் மண் மற்றும் கழிவுபொருட்கள் சேகரிக்கும் குழிகளை சரி செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 1/3/2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 7 உதவி பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் 15.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்தனர்.**

"மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 7 வார்டு 93 பச்சையப்பர் சாலையில் வெள்ள நீர் வடிகாலுடன் இணைக்கப்பட்டுள்ள வண்டல் மண் மற்றும் கழிவுபொருட்கள் சேகரிக்கும் குழிகள் (Silt Catching Pit) ஏற்ற இறக்கத்துடன் சாலையைவிட கீழிறங்கி உள்ள நிலையில் அக்குழிகளை சரிசெய்யும் பணிகளுக்காக மாநகராட்சியால் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விலைப்புள்ளிகள் இறுதிசெய்யப்பட்டவுடன் பணி ஆணைகள் வழங்கப்பட்டு, மேற்கண்ட பணிகள் இன்னும் 2 மாத காலத்தில் முடிக்கப்பட்டு அதன் அறிக்கையை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்கின்ற

விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 7ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன :

திரு. இரா. தீபக் விக்ராந்த் என்பவர் மண்டலம் -7, வார்டு 93, பச்சையப்பர் சாலையில் சுமார் 35 வண்டல் மண் மற்றும் கழிவு பொருட்கள் சேகரிக்கும் குழிகள், வெள்ள நீர் வடிகாலுடன் இணைக்கப்பட்டுள்ளன என்றும் இவைகள் யாவும் சாலையின் மட்டத்திற்கு சமமாக இல்லாமல் தாழ்வாக உள்ளதால், பொது மக்கள், இருசக்கர, வாகனம் ஓட்டுவோர் மிகவும் சிரமப்படுவதாகவும், எனவே அதனை சரிசெய்யுமாறு தனது மனுவில் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7, வார்டு 93, பச்சையப்பர் தெருவில் வண்டல் மண் மற்றும் கழிவு பொருட்கள் சேகரிக்கும் குழிகள் (Silt Catching Pit) சாலையின் மட்டத்திற்கு இல்லாமல், தாழ்வாக இருப்பது தெரியவருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -7ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் தங்களுடைய வாக்குமூலத்தில் மேற்கண்ட பணிக்காக மாநகராட்சியால் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன எனவும் விலைப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டவுடன், (Silt Catching Pit) பணிகள் இரண்டு மாதத்திற்குள் முடிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

2005-ம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு..

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

இந்நேர்வு குறித்து, மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர்களின் வாக்குமூலம் மற்றும் மேற்கண்ட விதிகளின்படி பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் நவம்பர் 2021 முதல் இப்பொருள் குறித்து புகார் மனு அளித்தும் பொது மக்களுக்கும், குறிப்பாக மாணவ/மாணவிகள் இருசக்கர வாகனத்தில் செல்வோருக்கு மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையில் உள்ள குழிகள் ஆபத்து விளைவிக்கக்கூடியதாக இருந்தபோதிலும், அக்குழிகளை சீர்செய்திட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் அலுவலர்கள் எந்தவிதமான முயற்சியும், நடவடிக்கையும் எடுக்காதது அவர்களின் அலட்சியத்தை காட்டுகிறது. இச்செயல் மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் இதனை கண்காணித்திருக்க வேண்டும். எனவே, மெத்தனபோக்காக செயல்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மனுதாரரின் புகார் தொடர்பான பணிகளை 2 மாதத்தில் நிறைவு செய்து அதன் அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன், மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The level glaring gaps, unevenness and surface lopsidedness in more than 35 places on the stretches highlighted by the petitioner as could be seen by the Forum on the video of the petitioner shown, besides the photos put the officials concerned on a spot awkwardly exposing their inaction, indifference, and apathy for more then 1 year. This kind of road level disparities and gaping open silts on the iron covers would cause serious road accidents especially throwing off the riders of two wheelers who may include school children, senior citizens and vulnerable road users leading to avoidable casualties and loss of lives. The field officers of the zone responsible have to be deterrently dealt with by severe disciplinary action by the Greater Chennai Corporation unsparingly. The Forum is at a loss to understand the role of the senior level Engineering functionaries like the Chief Engineer at the top and the Superintending Engineers who are supposed to inspect, review and redress such genuine grievances of the public and why these top-notch technocrats are dormant and passive without discharging their supervisory and guiding obligations efficiently then and there. A fatal accident on this type of road stretches would dent the image of the Greater Chennai Corporation negatively in the eyes of the area citizenry and media. The Commissioner of Greater Chennai Corporation is therefore counselled to issue appropriate directions to the Engineering hierarchy at the Rippon buildings and zones to sensitize themselves

on remedial action then and there to add light to the image of the local body. The Greater Chennai Corporation should ensure that the work of levelling the variations on the road stretches caused by the uneven fixing of silt catching pits should be completed within a period of 2 months positively and send a report to the Forum thereafter.

2023-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. இரா. தீபக் விக்ராந்த்,
   ஸ்ரீ மஹாலக்ஷ்மி மந்திரா அடுக்ககம்,
   1405 பிளாக் 1 B விங்,
   நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை,
   கோல்டன் ஜார்ஜ் நகர், சென்னை – 600 107.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (works)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   } *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி,
   536, சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை,
   காமராஜர் நகர், கலைஞர் கருணாநிதி நகர்,
   அம்பத்தூர், சென்னை - 600 053.
5. துணை ஆணையர்,
   மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி,
   536, சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை,
   காமராஜர் நகர், கலைஞர் கருணாநிதி நகர்,
   } *He is requested to ensure the implementation of this order*
   அம்பத்தூர், சென்னை - 600 053.
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை /
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்